

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் வடக்கு பகுதி 102 (அ) வட்டத்தில் வட்டகழக செயளாலர் எம்.ஜி.ரவிக்குமார் ஏற்பாட்டில், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், அண்ணா நகர் வடக்கு பகுதி கழக செயலாளர் ச.பரமசிவம், 102 வட்ட மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் தண்ணீர் குடில் திறந்து வைத்து பொது மக்களுக்கு இளநீர், மோர், பழங்கள் வழங்கினார். இதில் வட்ட கழக நிர்வாகிகள் அணைவரும் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதக்கரம் 63 வது நாள்!

## துறைமுகம் தொகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஏப். 24-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 63 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (23.4.2025) துறைமுகம் தொகுதி 1) 54வது வட்டம், தங்கசாலை தெரு, சரவண முதலி தெரு சந்திப்பு, அம்மா உணவகம் அருகில், சென்னை 2) 60 அ வட்டம் - அன்னை சத்யா நகர், ரேஷன் கடை அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.



சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ்

துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ராஜன், அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. ஆதி திராவிடர் நலக்குழு சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா நலத்திட்ட உதவிகள் - பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை!

காஞ்சிபுரம், ஏப்.24

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. ஆதி திராவிட நலக்குழு சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின்72 வது பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் நிதி நிலை அறிக்கை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (25.4.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, சித்தாமூர், சரவம்பாக்கம் கூட்டுரோடு சாலையில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாநில ஆதி திராவட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆதி திராவிட நலக்குழு அமைப்பாளர் பி.வி.புருஷோத்தமன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

வி.ஏழுமலை, பொன்.சிவக்குமார், ஏ.சிற்றரசு, எம்.துரைசாமி, டி.சாமிநாதன், ஜி.சிவக்குமார், எம்.குமார், வி.பாபு, ஆர்.ஞானகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., பசும்பொன் ரவிச்சந்திரன், ச.இனியரசு, டி.வி.கோகுலகண்ணன், மலர்விழிகுமார், சன்பிரான்ட் ஆறுமுகம், டி.ஆர்.நாராயணன், டாக்டர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமாறன், வெளிக்காடு வி.ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த், எஸ்.கே. ராஜேந்திரன், எஸ்.உசேன், ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், அ.யுவராஜ், எஸ்.டி.இசை, செம்பருத்தி துர்கேஷ், டைகர் மு.குணா, டி.மோகன்தாஸ், பிரேமா சங்கர், சாந்தி ரவிக்குமார், சம்யுக்தா அய்யனார், வெங்கடகிருஷ்ணன், ஆர்.பாஸ்கர், டி.நாகப்பன், குமுதாம துரை, என்.செல்வம், எஸ்.வேதாச்சலம், ஜி.ஜெயகண்ணன், ஆ.ஆறுமுகம், பா.லோகநாதன், கே.சசிகுமார், வி.செங்கடேசன், பொன்.சக்கரபாணி, ஏ.ஜி.ஆர்.சுமித்ரதேவி, து.குமார், வி.தனபால், பத்மாசெல்வராஜ், ரோக்சயராஜ், எம்.சி.டி.தினேஷ், மு.ச.டில்லிபாபு. தா.வரதராஜன், ஆ.முரளி, க.நிர்மல்குமார், சு.ஜெயந்தி, க.ஜெயந்தி, சி.கே. ரமணய்யா, செ.அய்யப்பன், சி.குமரேசன், அ.விஜயன், மு.கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்ட ஆதி திராவிட நலக்குழு துணை அமைப்பாளர் பி.ராஜாரா மகிருஷ்ணன் நன்றி கூறுகிறார்.

நந்தனம் ச.நம்பிராசன் ஏற்பாட்டில் தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# மயிலை 'காக்கும் கரங்கள்' இல்லத்தில் அறுசுவை உணவு!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ.வழங்கினார் !

சென்னை, ஏப்.24

கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு தி.மு.க. இலக்கிய அணி சார்பில் நந்தனம் ச.நம்பிராசன் ஏற்பாட்டில் சென்னை சாந்தோமில் உள்ள காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் 21.4.2025 அன்று பிற்பகல் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

இந் நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறுசுவை உணவு வழங்கினார்.

இதில் கிழக்குப் பகுதிச் செயலாளர்எஸ்.முரளி, மேற்கு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி, எம்.சி., வட்டச்செயலாளர் கோ.கண்ணன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் விஜய் வெங்கடேசன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப் பாளர்கள் ரமேஷ், செந்தில், பேராசிரியர் ஜெயபாலன், இலக்கிய அணி கணபதி உள்பட கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புரட்சிக் கவிஞர் பாவேந்தருக்குத் தமிழ் விழாவெடுக்கும் நம் மாமுதல்வர்க்கு

# உலகத் தமிழ்க் கூட்டமைப்பினர் இதய நன்றி - வாழ்த்தி வணங்குகிறோம்!

## பன்னாட்டுத் தமிழுறவுமன்ற உலக அமைப்பாளர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுரமன் அறிக்கை!

சென்னை, ஏப். 24 -

பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு"-

அன்னைத் தமிழுக்குப் புதிய வேகத்தையும், தாயகத் தமிழர்களுக்குப் புத்தெழுச்சியை யும் உருவாக்கும் புரட்சிக் கருத்துக்களைத் தமிழ்கூறு நல்லுலகிற்கு வழங்கியவர் புரட்சிக் கவிஞர் பாவேந்தர்! மகாகவி பாரதிக்கு மாட்சி தரும் வகையில் பாரதிதாசன் எனப் பெயர் சூடி, நம் திராவிட இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள் வழி தமிழ்மொழி, தமிழின, தமிழ்நாட்டின் உணர்வுகளுக்கு உரமூட்டும் உச்சப் படைப்புகளை வழங்கினார். தமிழ் மக்களுக்குத் திறமும், அறமும், மறமும் ஊட்டி இன்றைய தமிழ், தமிழர் களப் போராட்டங்களுக்கு ஊக்கமூட்டும் தாக்கக் கவிதைகளைப் புனைந்தளித்தவர் நம் புரட்சிக்



கவிஞரே!

தந்தை பெரியாரால், அறிஞர் அண்ணாவால், முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றிப் புகழாரம் சூட்டப் பெற்று, தமிழ்ச் சமூகத்தின் அரசியல் மாற்றத்திற்கான இந்தி ஆதிக்கத்தைத் தன் பாட்டு உச்ச உணர்ச்சியால் தமிழ் மக்களை வெற்றி முரசு கொட்டச் செய்தவர் நம் புரட்சிக் கவிஞர்.

புரட்சிக் கவிஞர் அவர் காலத்தில் வாழ்ந்த இளங்கவிஞர்களைத் தான் நடத்திய 'குயில்' இதழின் மூலம் அறிமுகப்படுத்திய புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் தலைமுறைக் கவிஞர்களை உருவாக்கினார். இன்றைய கவிதை உன்னத வளர்ச்சிக்குத் தலைமகனாகத் திகழ்ந்தவர் புரட்சிக் கவிஞரே!

"ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின் முன்னேற்றம் ஒவ்வொன்றும் உன் முன்னேற்றம்" எனப் பாடி தமிழ் வளர்ச்சியே தமிழன் வளர்ச்சியெனப் பாட்டிசைத்த நம் புரட்சிக் கவிஞரின் கவி ஆளுமையைச் சட்டப் பேரவையில் மிகவும் உன்னதமாகப் படம்பிடித்துக் காட்டியதோடு, தமிழர்க்கு மூச்சுக் காற்றாக உள்ள கவிதைகளை நம் முதல்வர் முத்துவேல் கருணாநிதி இஸ்டாலின் அவர்கள் மிகச் சிறப்பாக எடுத்தியம்பி தமிழர்களைச் சிந்திக்க வைத்துள்ளார்.

ஈடிணையற்ற இன்றைய தலைமுறைகளுக்கு தலைமை மாகவியாகத் திகழும் புரட்சிக் கவிஞர் பிறந்த 29.04.2025 ஆம் நாளிலிருந்து 05.05.2025ஆம் நாள் வரை தமிழ் வார விழாவாகக் கொண்டாடுமாறு தமிழ் வாகை சூடும் வகையில் நம் முதல்வர் அறிவித்துள்ளார்கள்.

துறை துறைதோறும் உன்னதம் காணும் நம் முதல்வர், தமிழ்ச் சமுதாயத் தலைமைக் கவி, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனுக்குச் செய்த இப்பெருஞ்சிறப்பு தமிழுக்குச் செய்த முதன்மை சிறப்பாகும். நம் மாமுதல்வர் அவர்களின் இவ்வருமை, பெருமை, செயற்கரிய செய்த உன்னதத்தை போற்றுகிறோம். உலகம் தழுவிய தமிழ்க் கூட்டமைப்பு களின் சார்பாக நன்றியினைக் காணிக்கை ஆக்கி வாழ்த்தி வணங்குகிறோம்.

இவ்வாறு பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் கூறியுள்ளார்.



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி இளைஞரணி சார்பில் பகுதி துணை அமைப்பவளர் ம.அருண் பிரபாகரன் ஏற்பாட்டில் பகுதி செயலாளர் இரா. செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, தண்ணீர் பந்தலை திறந்து வைத்தார். உடன் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. - டி. பாண்டிசெல்வம் பங்கேற்பு!

# மதுரவாயல் தெற்கு பகுதி 151 வது வட்ட பாகமுகவர்கள் கூட்டம்!

## வட்ட செயலாளர் அ.மோசஸ் அறிக்கை!

சென்னை,ஏப்.24-

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர்.அமைச்சர் மா.சுப்பிரமணி யன் அவர்களின் அறிவுருத்தலின்படி மதுரவாயல் தெற்கு பகுதி.151 வது வட்ட பாக முகவர்கள் (BLA 2 ) பாக உறுப்பினர்கள் (BLC) ஆலோசனைக் கூட்டம் வட்டக் கழக செயலாளர் அ. மோசஸ் அவர்களின் ஏற்பாட்டில் 24.4.25 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு போரூர் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள ஈஸ்வரி திருமண மண்டபத்தில் வட்ட கழக அவைத் தலைவர் செ.ராமையா தலைமையில்.மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ் எம்.சி. வரவேற்புரையில்.மாவட்ட பிரதிநிதிகள் வி. விஜயன், ஆர்சேகர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் தெற்கு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி MLA.மதுரவாயல் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் T. பாண்டிசெல்வம் ஆகியோர் கலந்து கொண்டு பாக முகவர்கள் மற்றும் பாக உறுப்பினர்களுக்கு ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

ஆகவே இக் கூட்டத்திற்கு வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்டத் துணை அமைப்பாளர்கள்.அணிகளின் பகுதி. வட்ட அமைப்பாளர்கள் . துணை அமைப்பாளர்கள் . பாக முகவர்கள் ( BLA2) மற்றும் பாக உறுப்பினர்கள் ( BLC) அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்

# 151வது வார்டில் ஏரியா சபைக் கூட்டம்!

## ச.சங்கர் கணேஷ் எம்.சி.பங்கேற்பு!

சென்னை ஏப்:24

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்XI, வார்டு151ல் 3, 4 மற்றும் 5 ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய செந்தில் நகர், சின்னப் போரூர், லட்சுமி நகர் விரிவு, மூர்த்தி அவன்யு மற்றும் லட்சுமி நகர் ஆகிய இடங்களுக்கான ஏரியா சபைக் கூட்டம் லட்சுமி நகர் விரிவு விளையாட்டுத் திடலில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 151வது வார்டு மாமன்ற உறுப்பினருமான ச. சங்கர் கணேஷ் எம்.சி. தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் 151வது வட்ட கழக அவைத் தலைவர் செ.இராமையா, 151வது வார்டிற்கு உட்பட்ட ஏரியா சபை உறுப்பினர்கள் கி. முரளி,என். துரை,ஏ. செந்தில்குமார்,ப. மணிகண்டன், ஏ. பிரசாந்த், எல்.சங்கர் கணேஷ்,151வது வார்டின் உதவி பொறியாளர்கள், சுகாதாரத் துறை அலுவலர் உள்ளிட்ட 151வது வார்டின் மின், துப்புறவு மற்றும் தூய்மை உள்ளிட்ட துறைகளின் அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இப்பகுதி நலச் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் கோரிக்களை எடுத்துரைத்தனர்.

இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை அறிவிப்புகளுக்கு

# திருக்கோயில் பணியாளர் - ஓய்வுபெற்ற பணியாளர் சங்கத்தினர் நன்றி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபுவை சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, ஏப். 24 -

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களை நேற்று (23-04-2025) தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியன் மற்றும் தமிழ்நாடு ஓய்வுபெற்ற திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியன் ஆகிய அமைப்புகளின் மாநில நிர்வாகிகள் சந்தித்து, இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது, திருக்கோயில் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும் பல்வேறு சலுகைகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.

20252026 ஆம் நிதி யாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கை சட்டமன்றப் பேரவையில் கடந்த 17.04.2025 அன்று நடைபெற்றது. அப்போது இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் திருக்கோயில் திருப்பணிகள், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், அர்ச்சகர் மற்றும் பணியாளர் நலன்களை பாதுகாத்தல் குறித்த 210 அறிவிப்புகளை வெளியிட்டார்.

அதில், திருக்கோயில் பணியாளர்களுக்கான குடும்ப நல நிதி ரூ.4 இலட்சமாக உயர்வு, ஈமக்கிரியை நிதி ரூ.10,000/மாக உயர்வு, பணியாளர்களுக்கான வாகன கடன் ரூ.50,000/ மாக உயர்த்தப்பட்டதோடு, அதில் ரூ.5,000/ மானியம், ஓய்வூதியம் ரூ.5,000/ மாகவும், குடும்ப ஓய்வூதியம் ரூ.2,500/ மாகவும் உயர்வு, பொங்கல் கருணைத் தொகை ரூ.2,000/மாக உயர்வு, இபிஎப் திட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு துறை ரீதியான ஓய்வூதியத் தொகைக்கு இணையாக கருணைத் தொகை மற்றும் பொங்கல் கொடை ஆகியவற்றை வழங்கிடும் வகையில் அறிவித்தமைக்காக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியனின் மாநில தலைவர் ஜெ.குமார், பொதுச்செயலாளர் க. ரமேஷ்குமார், செயல் தலைவர் மு.பக்கிரிசாமி, இணை செயலாளர் பொதுச் செயலாளர் இரா. ரமேஷ் மற்றும் நிர்வாகிகளும்,

தமிழ்நாடு ஓய்வுபெற்ற திருக்கோயில் தொழிலாளர்கள் யூனியனின் மாநில தலைவர் வி.கண்ணன், பொதுச்செயலாளர் எ.தேவராசன், தலைமை நிலையச் செயலாளர் அ.முத்துசாமி மற்றும் நிர்வாகிகளும் நேரில் சந்தித்து தங்கள் அமைப்புகளின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.




பெருநகர சென்னை மாநகராட்சி 10வது மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் உள்ள 142வது வார்டில் ஏரியா சபைக் கூட்டம் திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் 142வது வட்ட அலுவலகத்தில் சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், 10வது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், உதவி சுகாதார அலுவலர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கோட்ட உதவி பொறியாளர், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய பகுதி பொறியாளர், உதவிபொறியாளர், மின்துறை உதவி பொறியாளர், தமிழ்நாடு ஹமின்சார வாரிய உதவி பொறியாளர் உள்ளிட்ட சேவைத்துறை அலுவலர்கள் 142வது வட்டத்தில் அடங்கிய 10 ஏரியா சபை உறுப்பினர்கள் பங்கேற்ற குறைக்கேட்பு மற்றும் குறைதீர்ப்பு ஆகிய கூட்டுக்கூட்டம் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. உடன் பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா பங்கேற்றனர்.



தியாகராயர் நகர் 141 (அ) வட்டம், தென் மேற்கு போக் சாலையில் டி.வெங்கடேசன் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் குடிலை திறந்து வைத்தும், எஸ்.செல்வராஜ் மற்றும் எஸ்.யுவராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு வெயில் சூட்டை தணிக்கும் வகையில் நீர் மோர் பழங்களை தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி வழங்கினார். இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், வட்டச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன், வட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.